RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2119

# ராஜம்கிருஷ்ணனின் பெண்ணியச் சிந்தனைகள்

**ந. ஐயம்மாள் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா.

# Rajamkrishnan's Feminist Thoughts

**N. Iyammal [a, *]**

[a] Department of Tamil, Precidensy College, Chennai–600005, Tamil Nadu, India

* Corresponding Author: iyyammaln@gmail.com

Received: 30-08-2022
Revised: 27-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

The unity and understanding between men and women are essential for the development of the family, society, country and the world. Feminism is the result of women's thirst for liberation who have been suppressed for a long time. Feminism, which first emerged in Europe as part of the human rights movement, was a rational path towards women's rights. Feudal society always considered women as a second gender in a masculine culture. Many writers who wrote about histories and facts were subject to a sense of gender dominance. Therefore, women suffered a lot because of patriarchal society. To free them from this, many writers around the world gave voice in their works. It is only when women express their feelings that their strength can be felt. Thus, this article examines the feminist thoughts in the works of Rajamkrishnan.

**Keywords:** Rajamkrishnan, Women Rights, Society, Freedom

## முன்னுரை

குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் அனைத்தின் மேம்பாட்டிற்கும் ஆண், பெண் சமுத்துவம் இன்றியமையாதது. காலம் காலமாக அடங்கி வாழ்ந்த பெண்ணுக்குள் ஏற்பட்ட விடுதலைத் தாகத்தின் விளைவே பெண்ணியம் எனலாம். மனித உரிமைக்குரலின் ஒரு பகுதியாக ஐரோப்பாவில் முதன்முதலில் தோன்றிய பெண்ணியம் பெண்ணின் உரிமை சார்ந்த பகுத்தறிவுப் பாதையை நோக்கிய ஒன்றாகும். ஆண்மையைக் கலாச்சாரத்தில் நிலப்பிரபுத்துவச் சமுதாயம் பெண்களை இரண்டாந்தரக் குடியுரிமையராக உருவாக்கியுள்ளது. வரலாறுகளையும், உண்மைகளையும் தொகுத்து வழங்கக் கூடியவர்களில் பலர் பால் வேறுபாட்டு ஆதிக்க உணர்விற்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர். ஆதலால் பெண்ணினம் சொல்லொணாத் துன்பத்தில் சிக்கித் தவித்தது. இதிலிருந்து அவர்களை விடுவிக்க உலகமெங்கும் பல எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் குரல் கொடுத்தனர். பெண்ணின் மன உணர்வுகளை பெண்கள் வெளிப்படுத்தும் போதுதான் அதன் வீரியத்தை உணரமுடியும். அவ்வகையில் எழுத்தாளர் ராஜம்கிருஷ்ணனின் பெண்ணியச் சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

## குடும்பத்தில் பெண்களின் நிலை

மனிதன் கூடி வாழும் சமுதாய விலங்கு எனலாம். அவன் கணவன், மனைவி, குழந்தை, பெற்றோர் என்று கூடிவாழும் போது அவ்வமைப்பைக் குடும்பம் என்கிறோம். இன்றைய சமுதாயத்தில் குடும்பபாரம் என்பது பெருமளவு பெண்களைச் சாரந்ததாகவே உள்ளது. வீட்டு வேலைகள்

அனைத்தையும் பெண்களே செய்ய வேண்டும் என்ற நிலையுள்ளது. இக்குடும்பச் சூழலில் அம்மா, மனைவி, மகள், அக்கா, தங்கை, மாமியார், மருமகள், அண்ணி, நாத்தனார் எனப் பல நிலைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ராஜம்கிருஷ்ணன் தம் படைப்புகளில் பதிவுசெய்துள்ளார்.

ராஜம்கிருஷ்ணனின் 'சூழலில் மிதக்கும் தீபங்கள்' என்ற புதினத்தில் வரும் கிரிஜா எம்.ஏ.பி.எட்., படித்தவள். எட்டு ஆண்டுகள் ஆசிரியையாகப் பணியாற்றியவள். ஆனால் அவள் நிலைமையோ திருமணத்திற்குப் பிறகு வேறு. வேலைப்பளு மற்றும் கணவனுக்கும் மாமியாருக்கும் பயந்து 'ஆசாரம்' எனும் பெயரில் முடங்கிவிடுகிறாள். இதைக்கண்ட உறவுப் பெண்ணான ரத்னா மனவருத்தத்துடன்,

'தலையிட்டுத்தான் ஆகணும் கிரி ஆண்டி. நீங்க தனி மனுஷி இல்லை. ஒரு மொத்த சமுதாயத்தின் அங்கம். அறிவுப் படிப்புப் படிச்சு, கற்பிக்கத் தெரிஞ்சவங்க. உங்க அறிவு, திறமை, எல்லாம் இப்படி முட்டாள்தன மடிக்கூட்டில் பலியாகணுமா? மனுசருக்கும் மனுஷர் வேற்றுமை காட்டும் இது நிச்சயமா தருமமும் இல்லை. மண்ணும் இல்லை. தன்னையே எப்போதும் உயர்த்திப் பிடிச்சுகிட்டு மத்தவங்களைக் காலில் தேய்க்கும் கருவம் இது. ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணே விரோதியாகும் முட்டாள் தனம்' என்கிறாள் (Rajam Krishnan, 2004).

கிரிஜாவின் வீட்டில் அவளுக்கே தெரியாமல் அலமாரியில் இருக்கும் பெட்டியைப் பார்க்கிறாள். புதிதாக இருப்பதைக் கண்டு, ஏது இந்தப் பெட்டி, இப்பெட்டியை யார் வைத்தது? என்ற கேள்விகளை, உணவு உண்டு கொண்டிருக்கும் கணவனிடம் கேட்க, அவன் சோற்றுத் தட்டைத் தூக்கி எறிகிறான். தண்ணீர் குப்பியை வீச, அது உடைந்து சிதறுகிறது. கிரிஜா இதைப் பார்த்தவுடன், சீ! மனிதர்களா இவர்கள்? என்று மனதில்,

'பதினேழு வருஷம் அடிமைச் சேவகம் செய்து, குழந்தைகளைப் பெற்று வளர்த்த... இவளுக்கு ஒரு பேச்சு, ஒரு குரல் எழுப்ப உரிமை இல்லையா? அப்படியும் உரத்த குரல் கூட இல்லை. அந்த ஒரு பிசிறைக் கூட பொறுக்க முடியாத ஒரு கூடு இது...? ரத்னா கூறினாற் போன்று, இது எவ்வளவு மோசமான கடுமையான, வெளிக்குத் தெரியாத அடக்கு முறை? வசதியான வீடு, நவீனமான வாழ்க்கை வசதிகள் என்ற ஆடம்பரங்கள் ஒரு பெண்ணுக்குத் தன் உரிமைக் குரலின் இலேசான ஒலியைக் கூட எழுப்ப விடாத அழுத்தங்கள் வேறென்ன? என்று வருத்தமுடன் எண்ணுகிறாள் (Rajam Krishnan, 2002).'

'மாறிமாறிப்பின்னும்' என்ற புதினத்தின் வழி ராஜம்கிருஷ்ணன், ரேவு எனும் கதாபாத்திரத்தின் மூலம் குடும்பத்தில் பெண்களின் நிலை குறித்து,

'பதிமூன்று வயசில் இவளைக் கல்யாணம் என்று கயிற்றைக் கட்டி, மாமியாருக்கும், பாட்டிக்கும் சேவை செய்ய, மலஜலம் எடுக்க, புருஷனுக்கு ஈடு கொடுக்க என்று பூட்டி வைத்தார்களே, அப்போது வந்ததா? நடுத்தெருவில் வந்து விழுந்திருக்க வேண்டிய பூவை, அலையவிடாமல் நிழல் தந்து, அடுத்து வேளைச் சோற்றுக்கு அலையவிடாமல் 'பாதுகாத்தார்களே', அதனால் வந்ததா? இவளுக்கு ஒரு குடும்ப 'அந்தஸ்து', இன்னார் வீட்டு மாட்டுப்பெண் என்று, தாலியும் குங்குமுமாக, குருமடத்தில், சாதிக்குரிய சேலைக்கட்டுடன் 'உயர்சமூகம்' அங்கீரிகரிக்கக் கூடியதே, அப்போது வந்ததா? அவனும் பஞ்சகச்சம் உடுத்தி, வேசம் பூண்டு, உத்தம புருசனாக, இவளுக்குப் புரியாத மந்திரங்களைச் சொல்லி இவளுடன் சுவாமிகளை விழுந்து பணியும் போது, இவள் இவன் 'சகதர்மிணி' யாக அந்த வீட்டின் 'தலைவி' என்ற பொறுப்பில், இன்னமும் தன்னைப் பொறுப்புள்ளவளாக உயர்த்திக் கொண்டாளே! இரண்டு பிள்ளைகளைப் பெற்ற தாய் என்று குருட்டு வட்டத்தில் செக்கு மாடாகச் சுழன்றிருக்கிறாள்?' என்று குறிப்பிடுகிறார் (Rajam Krishnan, 2002).

## உடல் - உள வன்முறை

சிறுவயது முதற்கொண்டே பெற்றோர், மூத்தவர், கணவர் முதலியோர் பெண்கள் மீது வன்முறையைக் கையாளுகின்றனர். எதற்கெடுத்தாலும் பெண்களை கைநீட்டி அடிப்பது, கையில் கிடைத்த பொருட்களை ஈவு இரக்கமின்றி அவள்மீது வீசுவது, காலால் உதைப்பது, கன்னத்தில் அறைவது, வன்சொற்களால் ஏசுவது போன்ற செயல்களால் உடலாலும் உள்ளத்தாலும் பெண்ணைத்

துன்புறுத்துகிற வழக்காறு ஆணாதிக்கத்தின் உச்சக்கட்டம் எனலாம். மனைவியின் உள்ளத்தின் மீது மட்டுமின்றி உடல்மீதும் வன்முறையைக் கையாளும் போக்கும் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடே ஆகும்.

'மாறிமாறிப்பின்னும்' என்ற புதினத்தில் ரேவதி வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் புருஷனின் குரல் மேலிலிருந்து கேட்கிறது. ஏய் பாலெடுத்திட்டு மாடிக்கு வா என்று கத்துகிறான். இது புருஷ மிருகத்தின் ஆணை.

'அவளுள் சொற்கள் அழுக்குப் புழுக்கள் போல் பொல பொலக்கின்றன. வெட்கம் கெட்ட ஜன்மம். மிருகன் ராட்சசன், நீ நீ செத்தாக் கூட நான் அழமாட்டேண்டா.' என்ற தனது உடல் உள்ளப்பாதிப்பை வெளிப்படுத்துகிறாள் (Rajam Krishnan, 2002).

## பண்பாட்டு விலங்கு

மரபு என்பதற்காகவே சமுதாயத்திற்கு ஊறு விளைவிக்கும் பழக்க வழக்கங்களை அப்படியே பின்பற்றாமல் அவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆணாதிக்க, ஆண் முதன்மைச் சமூகத்தில் ஒழுக்கம் என்ற பெயரால் பெண் மட்டுமே ஒடுக்கப்படுகின்றாள். இந்நிலை மாற வேண்டும். ஆண்கள் எந்தக் குற்றத்தைச் செய்தாலும் பொறுத்து வாழ்வதே இல்லறத்திலுள்ள பெண்ணின் கடமை என்று காலங்காலமாக கருதப்பட்டு வருகிறது.

'அன்புடைக் கணவன் அழிதகச் செய்யினும்

பெண்பிறந்தார்க்குப் பொறையே பெருமை'

என்று பெருங்கதை பெண்மையின் பொறுமையை பறைசாற்றுகிறது (Sarala Rasagoplan, 2012). ஆண்கள் முறைதவறி நடப்பினும் அதனைப் பொறுத்தல் பெண்களின் கடைமை என்பதை சங்ககால மருதத்திணைப் பாடல்கள் உணர்த்துகின்றன.

'சுழலில் மிதக்கும் தீபங்கள்' என்ற புதினத்தில், கிரிஜாவுக்கு கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொள்ள நேரமில்லை என்பது முற்றிலும் உண்மையன்று. ஆனால் பார்த்துக் கொள்ளும் ஆர்வமும் மனமும் எங்கோ தொலைந்துவிட்டன. இவளுடைய மடிச்சேலைத்துணிகள் மாமியாரின் ஒன்பது கஜ நார்மடிப்பட்டு எல்லாம் 'உயர' தடையின் நீண்ட கொடியில் காய்கின்றன. அதனால் இவ்விடத்திற்கு வெளியாட்கள் வருவதற்கு அனுமதி இல்லை. கொம்பில் தன் சேலை - பாவாடை முதலிய துணிகளைக் கொண்டு போய் வெளியில் வைத்துக் கொள்கிறாள். நீராடி ஈரம் சொட்டும் சேலையுடன் 'மடித்' துணிகளை எடுத்துக் கொண்டு தலை துவட்டிக் கொள்ள வேண்டும். வேலைக்காரி துலக்கிய பாத்திரங்களை மீண்டும் நீரூற்றிக் கழுவிக் கவிழ்ந்து வடிந்த பிறகே உள்ளே எடுத்துச் செல்ல வேண்டும். தலைபோனாலும் கிரிஜா, குழந்தைகளின் துணிகளையோ, வேறு மடியில்லாத திரைச் சீலை போன்ற துணிகளையோ தொடலாகாது. மாமியார் இரவு 'ஆகாரம் பண்ணி முடியும் வரையிலும், இவள் பெண்களின் மேல் பட்டுக்கொள்ளவும் கூடாது. இதனை ராஜம்கிருஷ்ணன்,

'கடந்த பதினேழு வருஷங்களாக இவளைப் பூச்சியாக்கி வைத்திருக்கிறாள் என்ற உணர்வும் கூடவே இணைந்து எரிச்சலின் இழையைத் தோற்றுவிக்கிறது.' என்று கிரிஜாவின் மூலம் பண்பாடு எனும் பெயரில் அடிமைப்பட்டு கிடப்பதைக் குறிப்பிடுகிறார் (Rajam Krishnan, 2004).

## பெண் அலட்சியம்

பெண் என்றாலே ஓர் அலட்சியப் பார்வை இன்றளவும் உள்ளது. பெண் தனக்குக் கட்டுப்பட்டவள் என்பதால் ஆண் அவளைப் பல கட்டுப்பாடுகளுக்கும், துன்பத்திற்கும் உள்ளாக்குகின்றான். பொருளாதாரத்தில் பின்தங்கிய, சொத்துரிமை இல்லாத அடிமட்டத்துப் பெண்களை ஆண்கள் எளிதில் ஏமாற்றி விடுகின்றனர். இன்றைய சமுதாயத்தை நோக்கும் போது மனிதர்களிடையே அன்புப் பரிமாற்றத்தைக் காணமுடிவதில்லை. பெரும்பாலும் பெண்கள் பொருளாதாரப் பின்னடைவால் ஆணைச்

சார்ந்தே வாழக்கூடிய நிலைக்கு தள்ளப்படுகிறாள். பெண்களை அடிமைப்படுத்தி இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்துவதோடு அவர்களுடைய தனித்தன்மையையும் அலட்சியப்படுத்துகின்றனர்.

'அலைவாய்க்கரையில்' என்ற புதினத்தில் மரியான். பெஞ்சமின், எட்வின் இவர்கள் மீன்பிடித் தொழில் கிடைக்கக்கூடிய துவியைக் கோயிலுக்குக் கொடுக்க மாட்டோம் என்று மறுக்கின்றனர். வியாபாரிகள் வரி செலுத்துவதுபோல் நாங்களும் வரி செலுத்துகின்றோம் என்கின்றனர். கோயில் ஆதரவாளர்களுக்கும் இவர்களுக்கும் சண்டை உருவாகி கலவரமாக மாறுகின்றது. மரியான், பெஞ்சமின் எட்வின் மற்றும் இன்னும் சிலர் சாமியாரைத் தாக்க வந்ததாகவும், கோயிலை எரிப்பதற்கு முயற்சித்ததாகவும் கூறிப் போலிஸ்காரர்களை ஊருக்குள் வரவழைக்கின்றனர். பெஞ்சமின் தரப்பு ஊரைவிட்டு வெளியேறி மறைந்து வாழ்கின்றனர். ஊரிலுள்ள பெண்டு பிள்ளைகளை அடித்து அவமானப்படுத்துகின்றனர். ஆதவற்ற பெண்ணான ஏலியைக் காவல்துறையினர் அடித்ததோடு, அவளை பலமுறை சித்ரவதைச் செய்கின்றனர். ஏலிப்பெண் இறந்து விடுகிறாள். விலை மதிப்பில்லாத ஒரு பெண்ணின் உயிர் ஆணாதிக்கத்தின் அலட்சியத்தால் நீக்கப்படுகிறது. இதனை,

'ஒரு பெண் வாழ்க்கையின் எல்லா முனைகளிலும் மோதிக்கொண்ட பின்னரும் உயிர்வாழ எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தாள்! அதை நினைத்தாள் மட்டும் அவனால் தாள இயலுவதில்லை. பெண் பிள்ளைகளைவிடப் பயங்காளிகளாக ஓடிப்போனார்கள். தன் உயிரையே அவள் அவர்களுக்காகக் கொடுத்திருக்கிறார்கள். அப்பனை மீட்டு வந்ததறிந்து அவளைப் போலீசான் என்ன பாடுபடுத்தியிருக்கிறான்! எத்தனை தடியன்கள் அவளை உருக்குலைத்துக் கொன்றார்களோ?'[7] என்று குறிப்பிடுகின்றார் (Rajam Krishnan, 2000).

## சந்தேகம்

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் மனம் ஒன்றி இன்பதுன்பங்களைப் பகிர்ந்துக் கொண்டு இன்பமுடன் வாழவேண்டும். பாலியல் தேவை நிறைவேறுதல் மட்டும் இல்லறம் ஆகாது. மன ஒற்றுமையுடனும் வாழவேண்டும். அப்பொழுதுதான் முதுமைவரை இனிமையுடன் இல்லற வாழ்க்கை தொடரும். இதற்கு மாறாக கணவன் மனைவி மீது கொள்ளும் சந்தேகம் அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லும் நோயாக மாறிவிடும். வாழ்க்கைத் துணையாக வந்த பெண்ணைச் சந்தேகத் தீயினில் சிலர் எரித்துவிடுகின்றனர். கணவன் எத்தகைய ஒழுக்கக்கேடு உடையவனாக இருந்தாலும், அவன் மனைவியின் நடத்தையைச் சந்தேகித்துக் துன்புறுத்துகிறான். கற்புநிலை பற்றி பேசும் பாரதியார்,

'கற்புநிலை என்று சொல்லவந்தால் - இரு

கட்சிக்கும் அதனைப் பொதுவில் - வைப்போம்'

என்கிறார் (Andal Priyadharsini, 2012). குடும்பத்தில் வேலை செய்யும் இயந்திரமாகப் பார்க்கும் இந்த இல்லற வாழ்க்கை தேவைதானா? எனும் கேள்வி கிரிஜாவிற்குத் தோன்றுகிறது. மன உளைச்சல் காரணமாக அவள் ஹரித்துவார் செல்கிறாள். தன் குழந்தைகளைப் பற்றிய கவலை அவளுக்கு உருவாக, தாய்மை உணர்வுடன் மீண்டும் வருகிறாள். தான் அவமானப் படுத்தப்பட்டாலும் தன் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி சிந்திக்கிறாள். அவள் நிற்கவில்லை. விடுவிடென்று படி ஏறுகிறாள் கிரிஜா. கதவு திறந்தே இருக்கிறது. ஒருவரும் பள்ளிக்குச் செல்லவில்லை. பரத் அம்மாயென்று வேகமாக ஓடி வருகிறான் அவன்.

'அம்மா! நீ கெட்டுப்போயிட்ட, இனிமே வரமாட்டேன்னு சொன்னா. எப்படிம்மா கெட்டுப்போனே? என்று கேட்டதும் நெஞ்சில் கத்தரிப்பட்டுத் துண்டானாற்போல் துணுக்கென்று நோகிறது. குழந்தையிடம் யார் இப்படிச் சொன்னது? என்றவளிடம் கணவன் சந்தேகத்துடன் உரத்த குரலில்,

'பின்ன எப்படியடி சொல்ல? தொலைஞ்சு போனா

கெட்டுப் போனான்னுதானே சொல்லணும்?'

என்கிறான் (Bharathidasan, 2010). கிரிஜாவின் பதினேழு வருட உழைப்பினைச் சந்தேகம் எனும் பெயரில் கேள்விக் குறியாக்கிவிட்டதை நினைத்து மனமுடைந்து போகிறாள். உழைக்கும் பெண்ணிற்குரிய அங்கீகாரம் குடும்பத்தில் கிடைப்பதில்லை என்பதை ராஜம்கிருஷ்ணன் விளக்குகிறார்.

'மாறிமாறிப்பின்னும்' எனும் புதினத்தில் கதைமாந்தர் ரேவு, குடும்பத்தில் அடிமையாக நடத்தப்பட்டதால் மனநிம்மதிக்காக தம் தம்பி வேம்புவின் வீட்டிற்கு சென்று வரலாம் என்று எண்ணி, வீட்டை விட்டு வெளியேறுகிறாள். சில நாட்கள் இருந்துவிட்டு தன் பிள்ளைகளின் நலன் கருதி வீட்டிற்கு வருகிறாள். ரேவு வீட்டின் உள்ளே நுழையும்பொழுது எந்த விதமான உணர்வும் அன்பும் இல்லாமல் ராம்ஜி பார்த்து விட்டு செல்கிறான். எந்தப் பையன் மீது நம்பிக்கை வைத்திருந்தாலோ அது பொய் என்று உணர்ந்து கொள்கிறாள். வாழ்க்கையில் எந்தவித பிடிப்பும் படிப்பும் இல்லாத ரேவுக்கு வாழ்க்கை விரக்தியாகத் தோன்றுகிறது. 'சந்தேகம்' சவுக்கடி அவளைத் துரத்த,

'அப்படி இந்த பிள்ளை இன்று விட்டுப் போகும்படி இவள் மன்னிக்க முடியாத எந்தத் தப்பைச் செய்துவிட்டாள்? நிமிர்ந்து பார்த்து, ஒரு வார்த்தை பரிவுடன், பாசத்துடன் கேட்க முடியாதபடி, இவள் என்ன தவறு செய்தாள்? பெற்ற தாய்! இவள் டாக்டருக்குப் படிக்கப்போகிறானாம்!' என்று ரேவு குறிப்பிடுகிறாள் (Rajam Krishnan, 2002).

## மண வாழ்க்கை

ஒவ்வொரு பெண்ணின் வாழ்வில் நிகழும் இன்றியமையாத நிகழ்ச்சி திருமணம். இத்திருமணத்தில் பெண்ணின் விருப்பத்தைக் கேட்காமலேயே, ஆணுக்கும் அவன் பெற்றோர்களுக்கும் பெண்ணைப் பிடித்திருந்தாலே திருமணத்தைப் பெண்ணின் பெற்றோர் முடிவு செய்து விடுகின்றார்கள். இவ்வாறு ஆணின் விருப்பமும் அவனுடைய பெற்றோரின் கட்டுப்பாடுகளும் மட்டும் மதிக்கப்படுவது எங்கும் காணத்தக்க நடைமுறை,

'வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்

வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்'

என்ற பாரதியின் வைர வரிகள் ஆணாதிக்கச் சமுதாயத்திற்கு அறிவுறுத்துகின்றன (Bharathidasan, 2010).

ஒரு பெண் ஆடவனைத் திருமணம் செய்து கொண்டால் மட்டுமே அவளுடைய வாழ்க்கை சமுதாயத்தால் மதிக்கப்படுகிறது. இருப்பினும் ஆணாதிக்கச் சமுதாயம் திருமணம் என்ற பந்தத்தின் மூலம் அவளை அடிமைப்படுத்துகிறது என்பதை, 'சுழலில் மிதக்கும் தீபங்கள்' என்ற புதினத்தில்,

'ஒன்பதாவதுக்கு மேல் எட்டிப் பார்க்க முடியாத ஒரு அதிர்ஷ்டம் கெட்ட பெண்.... பதிமூன்று வயசுக்குள் எட்டு முடித்து ஒன்பதுக்கு வந்து என்ன பயன்? குடும்ப மானத்தைக் காப்பாற்ற மல்லிநாதன் என்ற ஒரு பத்தொன்பது வயசுக்காரனுக்கு அடிமையாக வேண்டி இருந்தது' என்று ராஜம்கிருஷ்ணன் தனது எண்ண அலைகளை வெளிப்படுத்துகிறார்.

## பெண் கல்வி

கல்வி கற்பது ஆணைப்போல் பெண்ணுக்கும் அடிப்படை உரிமையாகும். கல்வி கற்பது பெண்ணின் ஆளுமையை வளர்க்கும். கல்வி மட்டுமே பெண்ணை ஆணுக்கு நிகரென வாழ வைக்கும். இதனால் ஒவ்வொரு பெண்ணிற்கும் கல்வி மிக இன்றிமையாதது.

ராஜம்கிருஷ்ணனின் 'மாறிமாறிப்பின்னும்' என்ற புதினத்தில் படிப்பறிவு இல்லாத ரேவு தன் கணவனால் அடிமைப்படுத்தப்பட்டு, வாழும் வாழ்க்கையைக் கண்ட சுதா அறிவுறுத்துகிறாள். ஒரு பெண்ணின் சமூக வாழ்வை, தகுதியை அவளது பொருளாதாரமே நிர்ணயிக்கிறது. சுதா படித்து அலுவலகத்தில் பணியாற்றுகின்ற பெண். அவள்மீது கணவன் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தான். சுதந்திரமாகச் செயல்படக்கூடிய திறனுடையவளாகத் திகழ்ந்தாள். இதனால் ரேவுக் குடும்பத்தில்

நடக்கும் பிரச்சனைகளைச் சுதாவிடம் கூறி ஆறுதல் அடைகிறாள். ரேவுக்குக் கணவனிடம் நிகழும் அவலநிலைளைக் கண்டு, துணையாக நின்று அவளுக்கு உதவி செய்கின்றாள். சுதாவின் அறிவுச் சார்ந்த நிலைக்கு காரணம் கற்ற கல்வியாகும்.

சுதாவைப் பார்த்த ரேவுக்கு தானும் படிக்க வேண்டும். என்னை நானே காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் உருவாகிறது. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த ராஜம்கிருஷ்ணன்,

'இந்தக் கவுரவ நிழலைப் பற்றி எப்படி இவனுக்கு புரிய வைக்க? 'இல்லைடா வேம்பு, நான் எப்படியானும் படிச்சி ஒரு எஸ். எஸ்.எல்.சி. முடிச்சிருக்கணும். ஏதானும் வேலைக்குப் போய், என்னால் என்னைக் காப்பாற்றிக்க முடியும்னு ஆயிருக்கனும். கல்யாணம்னு என்னை இப்படி அடிமைச் சாசனம் பண்ணிண்டாலும், அப்ப புருஷன் மதிப்பான். இப்ப சுதாவைப் பாரு, எவ்வளவு ஃபிரியா இருக்கா? அவ புருஷன் அவளை எப்படி மதிக்கிறார், தாங்கறார்? அவர் பழகற விதமே மரியாதையாக இருக்கு. அவள் பகல் வேலை, ராவேலைன்னு போறா. அவரும் பாங்க் ஆடிட்டிங்தானே, பாதிநாள் போவார். ரெண்டு பேருக்கும் கர்வம் கிடையாது. அவாளும் எங்கோ வீடு கட்டிண்டு இருக்கா காலி பண்ணிட்டா, வேற யார் வருவாளோ!....' என்று தெளிவுப்படுத்துகிறார் (Rajam Krishnan, 2004).

மணியன் தூத்துக்குடிக்கக் கிளம்புகையில் தனது நண்பன் நசரேனைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று எண்ணினான். நசரேனுக்கு தன்னுடைய தங்கை லில்லிப் பெண்ணைத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் அது நடக்கவில்லை. நசரேனின் படித்த வசதியான பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நல்ல வாழ்க்கை நடத்துவதைக் கண்டு உளம் மகிழ்கிறான். நசரேனின் வீட்டிற்கு சென்ற சமயத்தில் நண்பன் மனைவியின் கல்வியிறிவும், உபசரிப்பும், விருந்தோம்பல் பண்பும் அவளை மேலும் மதிப்புடையவளாகக் கருதுகிறான். இதனை ராஜம்கிருஷ்ணன் அலைவாய்க் கரையில் புதினத்தில், 'இல்ல மயினி சாப்பாடெல்லாம் ஆயிப்போச்சி' அவளைக் கண்டதுமே அவனுடைய பொங்கெழுச்சி ஆறி, ஒரு பயபக்தி தோன்றிவிடுகிறது. அது பணத்துக்கு மட்டும் உரிய மரியாதையன்று அவள் படித்தவள், பண்பாகப் பேசத் தெரிந்தவள் காலைப் பரப்பிக் கொண்டு வாயிலில் அமர்ந்து பேன் பார்த்தவாறு பதில் சொல்லும் பெண் அல்ல' என்று இவ்வாறு படித்த பெண்ணிற்கு மதிப்பும் மரியாதையும் பண்பும் மிகுந்திருக்கும் என்கிறார் (Rajam Krishnan, 2000).

## முடிவுரை

சமுதாயத்தில் பெண்ணின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது ஆணாதிக்க உணர்வாகும். ஆண்களின் தன்னலத்தினால் பெண்கள் சமூகத்தில் வஞ்சிக்கப்பட்டும், களங்கப்படுத்தப்பட்டும், பாலியல் வன்முறை கொடுமைக்கும் உட்படுத்தப்படுகிறார்கள். வீட்டில் திருமணமானப் பெண்ணின் உழைப்பு சுரண்டப்படுவதைப் போன்று அவர்கள் பணிபுரியும் இடங்களிலும் உழைப்பு சுரண்டப்படுகிறது. ஆண், பெண் எனும் வேறுபாடு பிறப்பில் மட்டுமின்றி உழைப்பிலும், ஊதிய விகிதத்திலும் காணப்படுகின்றது. கல்வியறிவு இருந்தால் பெண்கள் தங்கள் அறிவினாலும் தனி திறமையினாலும் வாழ்வில் ஆண்களுக்குச் சமமாக முன்னேறி திறமையாகச் செயல்பட முடியும். 'குடும்ப விளக்கு' என்று போற்றப்படும் பெண்ணை, பெண்ணே கொடுமைப் படுத்துவது சமூகக் கொடுமைகளுள் ஒன்று. மேலும் அப்பெண் கணவராலும் புறக்கணிக்கப்படும் பொழுது இந்நிலை மாற குடும்பத்தை விட்டு வெளியேறுவதில் தவறில்லை. சமூகத்தில் பெண், கல்வி கற்று தன் வாழ்வைத் திட்டமிட்டு, ஆண்களுக்கு நிகராக உழைத்து வாழ்வில் முன்னேறமுடியும் என்பது போன்ற பெண்ணியச் சிந்தனைகளை ராஜம்கிருஷ்ணன் தம்படைப்புகளில் பதிவுசெய்து வாசகரை சிந்திக்க வைத்துள்ளார் என்பதில் மிகையில்லை.

## References

Andal Priyadharsini, (2012) Thogaiellam thuppakkikal, New Century Book House, Chennai, India.

Bharathidasan, (2010) Bharathiar Kavithagal, Uma Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2000) Alaivaaik kariyil, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2004) Suzhalil mithakum deepankal, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (2002) Marimarippinnum, Thagam Pathippagam, Chennai, India.

Sarala Rasagoplan, (2012) Peraanmaiyalarkalin pennurimai Sindhainaikal, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License